# வில்லிவாக்கம் ஏரியில் பறவைகள் சரணாலயம்

## பழைய திட்டத்தில் புதிய மாற்றம்

**சென்னை, ஆக. 30–**

வில்லிவாக்கம் ஏரியில், பறவைகள் சரணாலயம் அமைக்க, மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில், பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணியரை கவரும் வகையில், புதிய பொழுதுபோக்கு அம்சங்களை உருவாக்கும் முயற்சிகளில், மாநகராட்சி அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி, பயன்பாடின்றி இருந்த வில்லிவாக்கம் ஏரியை புனரமைத்து, பிரதான நீர்நிலையாக மாற்றி, சுற்றுப்புற பகுதி நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்கவும், அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இதற்காக, சென்னை குடிநீர் வாரியத்துக்கு சொந்தமான, 39 ஏக்கர் பரப்பு உடைய வில்லிவாக்கம் ஏரியில், 27.50 ஏக்கர் நிலத்தில், 16 கோடி ரூபாய் செலவில், பசுமை பூங்கா அமைக்கும் பணி நடக்கிறது.

மீதமுள்ள, 11.5 ஏக்கர் நிலம், குடிநீர் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

பசுமை பூங்கா திட்டத்தில், 20 ஆயிரம் கன மீட்டரில் இருந்து, 70 ஆயிரம் கன மீட்டராக ஏரியின் கொள்ளளவு உயர்த்தப்பட உள்ளது.

குழந்தைகள் விளையாட்டு திடல், திறந்த வெளி திரையரங்குகள், உடற்பயிற்சி நிலையம், 'ஆவின்' பாலகம், வாகன நிறுத்துமிடம், தடுப்பு வேலி உள்ளிட்டவை, அமைக்கப்பட உள்ளன.



■ வில்லிவாக்கம் ஏரியில் அமைக்கப்பட உள்ள, பறவைகள் சரணாலயத்தின் மாதிரி படம்.

பூங்காவிற்கு வருவோர் அமர, 30 இருக்கை வசதிகளும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், மின் கழிப்பறை வசதிகள், எல்.இ.டி., மின் விளக்குகள், குப்பை தொட்டி வசதிகள் செய்யப்பட உள்ளன.

ஏரியில் இருந்து உபரி நீரை, டி.வி.எஸ்., கால்வாயுடன் இணைத்து வெளியேற்றவும், ஏரிக்கு வரும் நீரின் தரத்தை அறிய, நீர்வரத்து கால்வாயில், 'ஆன்லைன் சென்சார்' பொருத்தப்பட உள்ளது.

பசுமை பூங்காவிற்கு வருவோர், சுத்தமான காற்றை சுவாசிக்க, மூலிகை செடிகள் மற்றும் மரங்கள் நட திட்டமிடப்பட்டுள்ளன.

இந்நிலையில், வில்லிவாக்கம் பசுமை பூங்கா திட்டத்தில், ஏற்கனவே உள்ள கட்டமைப்புகளுடன், பறவைகள் சரணாலயம் அமைக்க, மாநகராட்சி அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இது குறித்து, மாநகராட்சி தலைமை பொறியாளர், நந்தகுமார் கூறியதாவது:

வில்லிவாக்கம் ஏரியில், சமீபத்தில் மாநகராட்சி கமிஷனர், பிரகாஷ் ஆய்வு செய்தார். ஏரியில், மண் திட்டுகள் இருப்பதை கண்டார். அப்போது, நீர்ப்பிடிப்பு பகுதிகளில், ஏழு மண் திட்டுகள் அமைத்து, பறவைகள் சரணாலயமாக மாற்ற அறிவுறுத்தினார்.

இதனால், ஏற்கனவே உள்ள திட்டத்தின்படி, சில மாற்றங்கள் செய்யப்பட உள்ளன.

பறவைகளின் வசதிக்காக, மண் திட்டுகள் அமைத்து, அதில், அரிய வகை மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்படும். இப்பணிகள் விரைவில் துவங்கும்.

இவ்வாறு, அவர் கூறினார்.